போர் வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1979 புரட்டாசி 31
சென்னை, 16—10—48

என்னைப்பற்றி ஒரு வார்த்தை!

[பெரியார் ஈ. வெ. ரா.]

சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒரு இயக்கம் 1925-ல் என்னால் துவக்கப்பட்டது யாவரும் அறிந்ததேயாகும். அதைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டியவர்களுக்கு என்னைப் பற்றியும் சில வார்த்தைகள் சொன்னால்தான் என்னைப் பொறுத்தவரை நான் செய்தது சரியா, தப்பா என்பது விளங்கும்.

எனக்கு சிறு வயது முதற் கொண்டு ஜாதியோ மதமோ கிடையாது. அதாவது நான் அனுஷ்டிப்பது கிடையாது. ஆனால் நிர்ப்பந்தமுள்ள இடத்தில் போலியாகக் காட்டிக் கொண்டிருந்திருப்பேன். அதுபோலவே கடவுளைப்பற்றியும் மனதில் ஒரு நம்பிக்கையோ, பயமோ கொண்டிருந்ததும் இல்லை. நான் செய்யவேண்டுமென்று கருதிய காரியம் எதையும் கடவுள் கோபிப்பாரே என்றோ, தண்டிப்பாரே என்றோ கருதி (எந்தக் காரியத்தையும்) செய்யாமல் விட்டிருக்க மாட்டேன். கடவுள் மகிழ்ச்சியடைவார் என்று கருதியோ, சன்மான மளிப்பார் என்று கருதியோ (எனக்கு அவசியமென்று தோன்றாத) எந்தக் காரியத்தையும் செய்திருக்கவுமாட்டேன்.



எனது வாழ்நாளில் என்றைக்காவது ஜாதிமதத்தையோ கடவுளையோ உண்மையாக நம்பி இருந்தேனா என்று இன்னும் யோசிக்கிறேன். இதற்கு முன்பும் பல தடவை யோசித்திருக்கிறேன். எப்பொழுதிருந்து எனக்கு இவைகளில் நம்பிக்கை யில்லையென்றும் யோசித்து யோசித்துப் பார்த்திருக்கிறேன். கண்டுபிடிக்க முடியவே இல்லை.

எனது ஆறுவது வயதில் நான் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டேன். அப் பள்ளிக்கூடம் ஈரோடு டவுனுக்குச் சற்று விலகிய தூரத்தில் இருந்தது. (இப்போது அது நடு ஊராய் விட்டது.) அப் பள்ளிக்கூடத்தைச் சுற்றி வாணியச் செட்டிமார்களின் வீடுகள் உண்டு. எண்ணெய்ச் செக்கு சதா ஆடிக்கொண்டு இருக்கும். மூங்கிலில் பாய், முறம், கூடை பின்னுகின்றவர்கள், தெரு ஓரங்களில் குடிசை கட்டிக்கொண்டு தங்கள் வேலை செய்வார்கள். சில முஸ்லீம்கள் வீடும் குடிசை ரூபமாக அங்கே உண்டு.

ஆகவே அப் பள்ளிக்கூடத்தைச் சூழ்ந்திருந்த மக்கள் வாணியச் செட்டிமார், வேதகாரர்கள், சாயபுகள் ஆகியவர்கள். அந்த காலத்தில் இவர்கள் வீட்டில் மற்ற ஜாதியார்கள் என்பவர்கள் எவ்வித உணவும்

(4-ம் பக்கம் பார்க்க)

ள் நாடு $1\frac{1}{2}$ அணா.
ஆண்டு சந்தா ரூ. 5

வெளி நாடு 2 அணா.
ஆண்டு சந்தா ரூ. $6\frac{1}{2}$

★ பெரியார் விழா! ★

பரம நாஸ்திகன்!

சண்டாளன்!

சாஸ்திரங்களையே சழக்கர் உரை என்று தூற்றும் சதிகாரன்!

மா பாவி!

பாதகன்!

பழிகாரன்!

புனிதமான எண்ணங்களை, ஏற்பாடுகளை, முன்னோர் கட்டளைகளை, மூத்தோர் சொல் வார்த்தைகளை, அத்தனையையும் உதாசீனம் செய்து, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று உளறித் திரியும் உன்மத்தன்!

பிராமணத் துவேஷி!

வேதநிந்தகன்!

அண்ட சராசரங்களையும் ஆட்டிப் படைக்கும் ஆண்டவனையே இழித்துரைக்கும் கசடன்!

கோவில் விக்ரகங்களை எடுத்துப் போட்டு துணி துவைக்கலாம் என்று துணிந்து கூறிய தூர்த்தன்!

ஆண்டவன் ஆலயங்களை பிள்ளைகள் படிக்கும் சாலைகளாகவோ, தொழிற் கூடங்களாகவோ மாற்ற வேண்டும் என்று கொக்கரிக்கும் குருட்டறிவாளன்!

அவனைப் பார்ப்பதே தோஷம்! அவன் பேசக் கேட்பதே நமக்கு நரகம்!

செ! என்ன மனுஷனய்யா இவன்? ஆழ்வார்களை நாயன்மார்களை, அற்புத சித்தர்களை, ஆண்டவன் திருத்தூதர்களை, அதிசயங்கள் புரிந்தவர்களை, தேவாதி தேவரும் போற்ற வாழ்ந்த முனிபுங்கவர்களை, வேதாகமங்கள் கண்டு ஏத்தும் விப்பிரரை அனைவரையும் பழித்துப் பேசுகிறான்; ஏசல் மொழி கூறுகிறான்! கிண்டல் செய்கிறான்! கோமாளிகள் எனக் கூறுகிறான்!

இப்படி ஒருவன் நாட்டிலே உலவுவதே நம் புண்ணிய பூமியின் புகழுக்கு இழுக்கு!

இவனை சும்மா விடக்கூடாது!

அரங்கநாதனையும் திருமுருகனையும் ஆலவாயப்பனையும் இவன் வைய நாம் பார்த்துக்கொண்டிருப்பதா?

ஆகாது! கூடாது!

படைதிரட்டவேண்டும்! ஆஸ்திக சங்கங்கள் அமைக்கவேண்டும்! சிவநேசர்களையும் திருமால் பக்தர்களையும் ஒன்றுகூட்டவேண்டும்! ஏடுகள் பல தீட்ட வேண்டும்! நாஸ்திகம் பேசி நாத் தழும்பேறிய இந்த பாதகனுக்குப் புத்தி புகட்டவேண்டும்.

மடையன்!

என்ன நெஞ்சழுத்தம் இருந்தால் புனிதமான புராணங்களைத் தூற்றித் திரிவான்! இரணியனுக்கும், இராவணனுக்கும் நேர்ந்த கதி தெரியாதா! கண்ணபிரானை வைது கம்சன் பட்ட பாடு நாம் அறியாத சேதியா? மாணிக்கவாசகரைத் துன்புறுத்திய மன்னன் பாண்டியன் என்ன பாடுபட்டான் பிறகு? இவன் மட்டுமா தப்பி நிற்கப் போகிறான்!

கயவன்!

கருத்திலே ஏதோ கோளாறு இந்த ஆசாமிக்கு! அதனால்தான் இப்படியெல்லாம் பிதற்றுகிறான்!

காலம் கலிகாலமல்லவோ ஆகவேதான் இவன் பிறந்திருக்கிறான்!

* * *

பெரியார், இன்று ஆயிரமாயிரம் தமிழர்கள் நாம் பெருமிதத்தோடு நடந்து செல்லும் இந்த புரட்சிப் பாதையை அன்று அமைத்தபோது அந்த அரும் பெரும் பணிக்கு ஈடாக அவர் பெற்ற பரிசு பூமாலை அல்ல, புகழ்மாலை அல்ல, பாமாலையும் அல்ல, **வசைமாலை!** அந்த மாலையிலே இருந்து உதிர்ந்த ஒரு சில மலர்களும் இதழ்களும்தான் நாம் மேலே குவித்திருப்பவை!

ஆம், வசைமாலை முழுவதையும்கூட அல்ல, அந்த மாலையிலிருந்து உதிர்ந்து வீழ்ந்த ஒரு சில மலர்களையும் அந்த மலர்களிலிருந்து சிந்திச் சிதறிய ஒரு சில இதழ்களையும்தான் நாம் தந்திருக்கிறோம், ஆனால் இவையே போதும், பெரியாரின் பெருந் தொண்டு துவக்க காலத்தில் அவருக்கு எவ்வளவு மகத்தான எதிர்ப்பைத் தேடித் தந்தது என்பதை எடுத்துக் காட்ட.

புரட்சிப் பொறி பறக்க அவர் பேசியபோது, சாதி குலம் சமயமெனும் சழக்குகளை அவர், தம் தொண்டு எனும் கோடரி கொண்டு வெட்டிச் சாய்த்தபோது, மதம் எனும் போர்வையில் மக்களைச் சுரண்டிப் பிழைக்கும் சூதுமார்க்கத்தவரின் சுரண்டல் இயந்திரத்தை அவர் சுக்கு நூறாக்கியபோது, பரம்பரை பரம்பரையாக வேதத்தின் பேரால், புராண இதிகாசத்தின் பேரால், விக்ரக ஆராதனையின் பேரால், வீணருக்குத் தரும் பூரி தட்சணையின் பேரால், அர்த்தமற்ற சடங்குகளின் பேரால், கண்மூடி சம்பிரதாயங்களின் பேரால், ஆண்டவனுக்கு வழிபாடு என்னும் பேரால், மோட்சம் நரகம் பாவம் புண்ணியம் புனர் ஜென்மம் தலைவிதி ஆன்மா என்னும் போலிக் கற்பனை வார்த்தைகளின் பேரால் மக்கள் உள்ளத்தில் படிந்துகிடந்த மூடபனியினை கொஞ்சம் கொஞ்சமாக ஆனால் தைரியமாக அவர் விலக்கத் தொடங்கியபோது, பழமையின் உடும்புப் பிடியிலிருந்து சமுதாயத்திற்கு விடுதலை தருவேன்—புத்துலகப் பூந்தோட்டத்திற்கு மக்களை அழைத்துச் செல்வேன் என அவர் இடிமுழக்கம் புரிந்தபோது, மக்களை மாக்களாக்கும் இராம-

காதையா—தீயிலிட்டுப் பொசுக்கு அதனை! புரட்டர் உரையினை புனித வாக்கியம் என்று பொய் உரை புகன்று மக்களை ஏய்த்திடும் மனுநீதியா—கிழித்துப் போடு அதனை! சாதிக்குச் சாதி மேல்சாதி கீழ்சாதி என்று வகுத்து முன்னேற்றப் பாதையில் முட்டுக் கட்டை போடும் பார்ப்பனீயமா—மரண தண்டனை கொடு அதற்கு! மடாதிபதிகளும் மண்டலாதிபதிகளும் அந்தப் பார்ப்பனீயத்தின் துணைவர்களும் தோழர்களுமாய் இருக்கிறார்களா—துரும்பு அவர்கள் எனக்கு என்றெல்லாம் அவர் பகுத்தறிவுப் பிரசாரம் தொடங்கியபோது மக்கள் மருண்டனர். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக தாங்கள் பின்பற்றி வரும் சமுதாய வழக்கங்களை ஒரே ஒரு ஆள், திடீரென்று முளைத்து, மேடை பல அமைத்து, மடமடவெனத் தாக்குகிறார்! அவரோ கல்லூரி மண்டபத்தை எட்டிப் பாராதவர்! கலைகள் பல பயின்று அறியாதவர்! பட்டமோ பதவியோ பெற்றிராதவர்! புகழ் வேண்டுமென்ற ஆசையோ சிறிதும் இல்லாதவர்! எதைச் சொன்னால் சமுதாயம் தூற்றுமோ அதைச் சொல்கிறார், மக்கள் எதை எதை நம்பி வந்தார்களோ, எதை எதை தங்கள் வாழ்க்கைக் கட்டிடத்தின் கடைக்கால்கள் என்று எண்ணி வந்தார்களோ அதையெல்லாம் தூற்றுகிறார், யாரடா இவர் அதிசய மனிதர் என்று திகைத்தனர். அவர் வீசிய வெடிகுண்டுகள் தாம் அருமையாக கட்டிக் காத்துவந்த பழமைக் கருத்துகள் என்னும் கோட்டைகளின்மீது விழுந்ததும் பாபி நாஸ்திகள் பாதகன் என்றெல்லாம் அவர்மீது பழி தூற்றலாயினர். மதத்தைத் தாக்குகிறான்—மடாதிபதிகளைத் தாக்குகிறான்—வேத புராண இதிகாசங்களைத் தாக்குகிறான்—சாதிமத ஆச்சார அனுஷ்டானங்களைத் தாக்குகிறான்—முன்னோர் ஏற்பாடுகளைத் தாக்குகிறான்—அற்புதக் கலைகளை காவியங்களைத் தாக்குகிறான்—சண்டாளன் சழக்கன் சதிகாரன் என்று ஏசல் உரை பல வீசலாயினர்.

பெரியாரின் பிரசாரம் முதலிலே திகைப்பை, பிறகு ஆத்திரத்தை, அதன்பிறகு நமக்கெல்லாம் இவ்வளவு ஆத்திரத்தை மூட்டும் விதமான நினைப்பும் நடவடிக்கையும் கொண்ட இந்த ஆளை விட்டுவைக்கவே கூடாது என்ற வைராக்கியத்தை, அதற்கும் பிறகு, ஏதேது இந்த ஆளை லேசாக எண்ணினோம்—திடீர்க் காளான், விரைவில் கருகிவிடும் என்று கருதினோம்—ஆள் அடங்குவதாகக் காணோம்—அடங்கவில்லை என்பது மட்டுமல்ல—வளரும் ஜாடை கூடத் தென்படுகிறது—இனி வாளா இருப்பது சரியல்ல—எதிர்ப்பு முன்னணி அமைக்க வேண்டும்—ஆளை, போரிட்டு அடக்கவேண்டும் என்ற 'போர்' நினைப்பை மக்களுக்கு ஊட்டிற்று.

இவ்வண்ணம் மக்கள் உள்ளம், திகைப்பிலே தொடங்கி, ஆத்திரம் ஆவேசம் வைராக்கியம் என்னும் பற்பல நிலைகளைத் தாண்டி, போர் தொடுத்தேனும் இந்தப் புல்லன் உரையைப் பொசுக்கவேண்டும் என்ற சஞ்சலபுரிவரையில் பயணம் செய்துகொண்டிருந்தபோதெல்லாம், பெரியார், எதிர்ப்பு எழுவது கண்டு அஞ்சாமல், வசைமொழி வருவது கண்டு சளைக்காமல், கோப அலைகள் நாலாபுறமும் தன்னைத் தாக்குவது கண்டு மனம் உடையாமல் தன் பணியைத் தொடர்ந்து நடத்திவந்தார்.

நடத்திவந்தார் என்றால் ஓர் ஆண்டல்ல, இரண்டு ஆண்டல்ல, முப்பது ஆண்டுகள்! முப்பது ஆண்டுகள், பெரியார், தன் தொண்டின் விளைவு என்ன ஆகுமோ, அது பலன் கொடுக்குமோ கொடுக்காதே, அறுவடை இருக்குமோ இருக்காதோ, விளையும் பயிர் செழிப்பாக இருக்குமோ அன்றி சாவியாகிப் போகுமோ என்ற கவலை துளியும் இன்றி சண்டமாருத வேகத்தில் தன் பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்திவந்தார்.

அவர் தன்னுடைய புரட்சி இயக்கத்தைத் தொடங்கியபோது அவருக்குப் பத்திரிகை பலம் உண்டா—கிடையாது.

பிரசார வசதிகள் உண்டா?—இல்லை?

சர்க்கார் அவர் பக்கம் இருந்ததா?—கிடையாது! அவர் வெளியிட்ட புத்தகங்களைப் பறிமுதல் செய்து, அவருடைய பத்திரிகைக்குத் தடை விதித்து, அவருடைய பிரசாரத்திற்கு 144 போட்டனர் சர்க்கார்!

படித்த கூட்டத்தவரின் பக்கத் துணை அவருக்கு உண்டா?—இல்லை! அவர்கள், அவருடைய நேர் எதிரிகள்!

நாட்டிலே உள்ள நானாவிதமான பத்திரிகைகள் அவருக்கு உதவி செய்தனவா?—உதவி அல்ல இருட்டடிப்புச் செய்தன. தவறி, எப்போதேனும் அவரைப் பற்றிய செய்திகளை வெளியிட்டால் மக்களுக்கு அவர் மீது ஆத்திரம் மூளும்விதத்தில் வெளியிட்டன.

பலம் பொருந்திய காங்கிரஸ் கட்சியின் சார்பும் துணையும் அவருக்கு உண்டா—கிடையாது கிடையாது. காங்கிரஸ் அவர் இயக்கத்தின்முன் தன் ஈட்டி முனையைக் காட்டிற்று தன் வல்லமையைக் காட்ட.

ஏராளமான தோழர்களின் கூட்டுத் துணை இருந்ததா அவருக்கு—அதுவுமில்லை. ஒரு சில "அன்னக் காவடிகள்" அவர் பக்கம் இருந்தனர். அவ்வளவு தான்.

பாமரர்கள்?—அவரைத் தூற்றினர்.

பண்டிதர்கள்?—அவர் மீது கவண்கல் வீசினர்.

ஜஸ்டிஸ் கட்சி?—அவரை சந்தேகக் கண்ணுடன் பார்த்தது.

கோயில் பெருச்சாளிகள், மடத்துப் பூனைகள், அறநிலைய வல்லூறுகள்?—அத்தனையும் அவர் மீது பாய்வதற்கு சமயம் பார்த்துக் கொண்டிருந்தன.

ஆம்! காங்கிரஸ் அவருக்கு எதிரி! பண்டிதர்கள் அவருக்கு எதிரி! பாமரர்கள் அவருக்கு எதிரி! பாட்டாளிகள் அவருக்கு எதிரி! சைவர்கள் அவருக்கு எதிரி! வைணவர்கள் அவருக்கு எதிரி! கிறிஸ்தவர்கள் அவருக்கு எதிரி! இஸ்லாமியர் அவருக்கு எதிரி! பத்திரிகைகள் அவருக்கு எதிரி! சர்க்கார்—அவருக்கு எதிரி! ஊர்ப்பெரிய மனிதர்கள்—அவருக்கு எதிரி! மடாதிபதிகள்—அவருக்கு எதிரி! ஆளவந்தார்கள்—அவருக்கு எதிரி! பார்ப்பன சமுதாயம்—அவருக்கு எதிரி! ஆதிக்கவாதிகள்—அவருக்கு எதிரி! பழமைப் பித்தர்கள்—அவருக்கு எதிரி! சனாதன தர்மிகள்—அவருக்கு எதிரி!

பெரியார், தன் பயணத்தைத் தொடங்கியபோது நாலாபுறமும் எதிரிகள்தான் சூழ்ந்திருந்தனர் அந்நிலையில்

(10-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அருந்த மாட்டார்களல்லவா? ஆகையால் என் வீட்டார்கள், நான் பள்ளிக்குப் போகும்போது எனக்கு ஞாபகமாய் சொல்லியனுப்புவார்கள். என்னவென்றால் "அங்குள்ள ஜாதியார், 'பொழங்கக்கூடாத" ஜாதிக்காரர்கள். அவர்கள் வீட்டில் தண்ணீர் குடித்துவிடாதே. வேண்டுமானால் வாத்தியார் வீட்டில் வாங்கிக் குடி" யென்று சொல்லியனுப்புவார்கள். அது போலவே இரண்டொரு தடவை வாத்தியார் வீட்டில் தண்ணீர் கேட்டேன். வாத்தியார் ஓதுவார் ஜாதி. மாமிசம் சாப்பிடாத சைவர். அவர்கள் வீட்டுச் சிறு பெண் எனக்குத் தண்ணீர் கொடுக்கும்போது ஒரு வெண்கல டம்ளர் கீழே வைத்து அதில் தண்ணீர் ஊற்றி, எடுத்துத் தூக்கிக் குடிக்கச் சொல்லும். நான் குடித்த பிறகு கவிழ்த்து வைக்கச் சொல்லும். பிறகு அதன் மீது தண்ணீர் ஊற்றி அதை எடுத்து நிமிர்த்தி உள்ளேயும் தண்ணீர் ஊற்றிக் கழுவி உள்ளே எடுத்துக் கொண்டு போகும். இதற்குள் எனக்குத் தூக்கிக் குடிக்கத் தெரியாமல் குடிக்கும்போது பகுதி தண்ணீர் மூக்கிலும் உடல் மேலும் விழும். பகுதி தண்ணீர்தான் வாயில் விழும். மூக்கில் விழுந்த தண்ணீரால் புரைபோய் இருமல் வந்து வாய்த்தண்ணீர் கீழே விழும். இதையெல்லாம் பார்த்து அந்தப் பெண் அசிங்கப்படும். சில சமயம் கோபித்து வையும். அதனால் நான் தாகம் ஏற்பட்டாலும் வாத்தியார் வீட்டில் தண்ணீர் கேட்பதில்லை. வாணியச் செட்டியார் பிள்ளைகள் வாத்தியார் வீட்டில் தாகத்திற்குத் தண்ணீர் கேட்பதில்லை. எழுந்து நின்று பெருவிரலை வாத்தியாருக்குக் காட்டியவுடன் "போய்விட்டுச் சீக்கிரம் வா" என்பார். பையன் ஓடோடி அவன் வீட்டிலோ, அவனது வீடு சற்று தூரமாய் இருந்தால் சமீபத்தில் உள்ள ஒரு செட்டியார் வீட்டிலோ குடித்துவிட்டு ஓடிவருவான். ஒரு நாள் நானும் அங்கு போய்த் தண்ணீர் சாப்பிடலாமென்று கருதி ஒரு செட்டியார் பையன் எழுந்து பெருவிரல் நீட்டும்போது நானும் நீட்டினேன். இருவரையும் போகும்படி வாத்தியார் தலையாட்டினார். இருவரும் ஓடினோம். வாத்தியார் "ராமா நீ எங்கே ஓடறை?" என்றார் "தண்ணீருக்கு ஐயா!" என்றேன். "தண்ணிக்கு அவன் கூடப்போறயே?" என்றார். பிறகு நான் வாத்தியார் வீட்டுக்கு (அதாவது ஒரு கூரைச் சாலையில் ஒரு பாகம் நிரைச்சல் கட்டித் தடுத்து அதில் வாத்தியார் குடியிருக்கிறார்.) போய் தண்ணீர் குடித்து தண்ணீரை தேகமெல்லாம் சிந்திக்கொண்டு வேஷ்டியையும் நனைத்துக்கொண்டு வந்து உட்கார்ந்துகொண்டேன். அடுத்த நாள் தண்ணீர் தாகமெடுத்தபோது ஒரு செட்டியார் பையனுடன் கூடப்போகத் தீர்மானம் பண்ணிக்கொண்டு அந்தப் பையனிடம் பேசி வைத்து அவன் தண்ணீர் குடிக்கப் பெருவிரலைக் காட்டுமுன்பே நான் ஒன்றுக்குப் போகக் கேட்பவன் போல் எழுந்து நின்று ஆள்காட்டி விரலை நட்டத்தில் நீட்டிக் காட்டினேன். வாத்தியார் தலையை அசைத்தார். நான் வாத்தியார் வீட்டுக்குப் பின்புறம் போய் நின்றுகொண்டேன். செட்டியார் வீட்டுப் பையன் தண்ணீர் குடிக்க அனுமதி கேட்டுக்கொண்டு வந்தான். அவன் வீடும் பின்புறமாய்ப் போகக்கூடியதுதான். அவனும் நானுமாக அந்தச் செட்டியார் வீட்டுக்கு ஓடினோம். அவன் லோட்டாவில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். நான் சாதாரணமாக எங்கள் வீட்டில் குடிப்பதுபோல் லோட்டா விளிம்பை உதட்டில் வைத்து குடித்தேன். அந்தச் செட்டியார் வீட்டம்மாள் என்னைப் பார்த்ததும் "நீ நாய்க்கர் வீட்டுத் தம்பியா?" என்றார். நான் "ஆமாம்" என்றேன். "இங்கே தண்ணீர் குடிக்கிறயே! உங்க வூட்டிலே ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா?" என்றார். சொல்லமாட்டாங்கோ என்று சொல்லி

(9-ம் பக்கம் பார்க்க)

புரட்சித் தலைவர் பெரியார் அவர்களின் வாழ்க்கை **70-ம் ஆண்டு** என்னும் மைல் கல்லைத் தாண்டிவிட்டது. என்றாலும் அந்த அஞ்சாத நெஞ்சரின் சூறாவளிப் பிரசாரமோ, மின்சார வேகச் சுற்றுப் பயணமோ, புரட்சிகரமான பொது வாழ்க்கைத் தொண்டோ இம்மியளவும் குறையவில்லை. மாறாக, வயது ஏற ஏற அந்த மாவீரரின் தொண்டும் புதிய பலமும் வேகமும் உற்சாகமும் பெற்று மடமடவென வளர்ந்து வருகிறது—வெல்க அத் தொண்டு!

அஞ்சாத நெஞ்சுடைய அடலேறு, பெரியார்!

மறுமலர்ச்சி இயக்கத் தந்தை அம் மாவீரரே ஆகும்!

பெரியார் இராமசாமி குறித்து சர். ஏ. இராமசாமி

சென்ற நாற்பதாண்டுகளாக திரு ஈ. வெ. ரா அவர்கள் இத்தென்னாட்டில் பிரம்மாண்டமான பணியாற்றி வருகின்றனர் இன்றைய தமிழ் நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் ஈ. வெ. ரா. அவர்களின் பெயர் சொந்தப்பெயராகவே உரிமையுடன் வழங்கப்படுகிறது. அவருடைய பெயரும் புகழும் தமிழ்நாட்டில் மட்டுமன்றி ஆந்திர தேசத்திலும் பம்பாயிலும மத்திய மாகாணங்களிலும் பிற இடங்களிலும் பரவி இருக்கின்றன என்பதைப் பெருமிதத்தோடு நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் **எங்கெங்கே தமிழ் உணர்ச்சி தவழ்கின்றதோ, எங்கெங்கே சமுதாய சீர்திருத்தம் பேசப்படுகின்றதோ, எந்தெந்த இடத்தில் புரட்சி வாடை வீசுகின்றதோ. அங்கெல்லாம் ஈ. வெ. ரா. வின் பெயர் ஒளிவீசித் திகழ்கின்றது.** ஒரு சில ஆண்டுகளுக்குள் இத்தகைய பரந்த செல்வாக்கு அவருக்கு எப்படி ஏற்பட்டுவிட்டது? அவருடைய வாழ்க்கை முறையில், நடைமுறைத் திட்டத்தில், இடையறாத பெருந்தொண்டில், பேச்சில், எழுத்தில் பொதுமக்களை எல்லாம் தன்பால் ஈர்க்கத்தக்க அத்தகைய தனிச்சிறப்பு என்னதான் பொதிந்து கிடக்கின்றது? சென்ற முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளில் வேறு யாரும் செய்து முடிக்காத அரும்பணியை அவர் ஒருவரே ஆற்றி இருக்கின்றார் என்று எல்லாராலும் சொல்லப்படுகின்றதே அதற்கென்ன காரணம்? பொது நலத் தொண்டு புரிவதில் அவர் அப்படி என்ன புதைபொருளைக் கண்டு பிடித்து விட்டார்? இதைத்தான் நாம் சிந்தித்தறிய வேண்டும்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே நாங்களெல்லாம் கூடத்தான். சமூக சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசிவந்தோம். சமூக சீர்திருத்தத்தைத் தேசிய முறையில் கையாளுவதா அல்லது ஆராய்ச்சி முறையில் கையாளுவதா என்று நாங்கள் அக்காலத்தில் தர்க்கம் பண்ணிக்கொண்டிருந்தோம். நான் அந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேன்; இந்த நாட்களையும் பார்க்கிறேன்; வியக்கத்தக்க போராற்றலைப் பொது மக்களிடத்தெல்லாம் நண்பர் நாயக்கர் எழுப்பி விட்டதைத்தான் பார்க்கிறேன்.

அந்தக் காலத்தையும் இந்தக் காலத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன்; மக்களிடத்தே புது எழுச்சியைப் பார்க்கிறேன்.

நண்பர் ஈ. வெ. ரா. காலத்தையே மாற்றி விட்டாரா என்ன?

அந்தக் காலத்தில் நாங்கள், படித்த கூட்டத்தாரைக்கொண்டு, சீர்திருத்த ஆர்வத்தை, நாட்டில் எழுப்பிவிடலாம் என்று நம்பினோம். ஆனால் இராமசாமி நாயக்கரவர்கள் படித்த கூட்டத்தாரைப்பற்றிக் கவலைப்படுவதே கிடையாது. என்ன ஆனாலும் சரி சீர்திருத்தம் மட்டும் கூடவே கூடாது என்று சூள் உரைத்து விட்ட (படித்த) கூட்டத்தாரிடம் சீர் திருத்தப் பணியாற்றுவதில் ஈ. வெ. ரா. அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது; ஆம்! படிப்பு வாசனை அறியாத பாமர மக்களிடம் தன் முழுச் சக்தியையும் அவர் செலவிட்டுப் பணியாற்றி வருகிறாரே அதிலேதான் அவருடைய வெற்றியின் இரகசியம் அடங்கி இருக்கிறது. பரிதாபத்திற்குரிய வாழ்க்கையில் உழன்றுகொண்டிருக்கும் பாமர மக்களை அவர்களுடைய நீண்ட உறக்கத்தினின்றும் தட்டி எழுப்புவது; அவர்களுடைய உள்ளத்தில் தன் கருத்துகள் நேரே சென்று பதியக்கூடிய வண்ணம் பேசுவது; எழுதுவது;—இவற்றின் தொகுப்புத்தான் நண்பர் இராமசாமி நாயக்கரின் பெருந்தொண்டு.

தங்கள் வாழ்க்கையின் இலட்சியத்தை உணர வழியின்றி, எங்கும் நிறைந்த அந்தகாரத்தில் தங்களுக்கு 'வழிகாட்டக் கூடிய ஒளி ஒன்று கிடைக்குமா என்று வாடி வருந்திக் கொண்டு ஆயிரமாயிரம் மக்கள் வதைவதை அவர் கண்டார்; சோர்ந்துபோன அவர்களுடைய உள்ளங்களுக்குச் சுறுசுறுப்பை ஊட்டினார்; மங்கி மறைந்துபோன பகுத்தறிவுணர்ச்சியை"த் தட்டி எழுப்பினார்; எதனையும் ஆராய்ந்து பார்க்கத் தூண்டும் சிந்தனா சக்தியை அவர்களுக்கு அளித்தார். இதைவிடச் சிறந்த தொண்டு வேறு என்னதான் இருக்க முடியும்?

எந்தக் கருத்தையும் பகுத்தறிவுக் கண்கொண்டு ஆராய்ந்து, காரண காரியத் தத்துவங்களுக்குப்

(8-ம் பக்கம் பார்க்க)

யாம் கொண்ட உவமை

1939! ஆச்சாரியார், சென்னை மாகாணத்தின் ஆளவந்தாராக இருந்த காலம்! இந்தி எதிர்ப்புப் போர் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! மூன்றாண்டு கடுங்காவல் தண்டனையை ஏற்று உள்ளே சென்ற பெரியார், ஆறுமாத சிறைவாசத்திற்குப் பிறகு, திடீர் விடுதலை பெற்று வெளியே வந்தார். அவர், மேலும் சிறையிலே இருந்தால், தமிழகத்தில் என்ன நேருமோ, ஏது ஆகுமோ என்ற அச்சம் சர்க்காருக்கு. ஆகவே விட்டுவிட்டனர். வந்துவிட்டார் நம் தலைவர் என்ற சேதி கேட்டு துள்ளிக் குதித்தது தமிழகம். தமிழர், ஆனந்தப் பள்ளு பாடினர். கடற்கரையில், மாபெருங்கூட்டம் திரண்டது அம் மாவீரரை வரவேற்க!

இதோ வந்துவிட்டார் தமிழர்தம் உள்ளத்தை ஆளும் உத்தமர். கொண்டுவிட்டார் தமிழர் பெருங்களிப்பு. தகதகவெனக் குதித்தாடத் தொடங்கிவிட்டது அவர்கள் உள்ளம்.

அங்கே **புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும்** இருந்தார். அவர் உள்ளமும் களிப்பினால் ததும்பிற்று பெரியாரின் வருகைகண்டு! அந்தக் களிப்பிற்கு எல்லை இல்லை! எல்லைதான் இல்லையே, அதற்கு ஈடான களிப்பாவது வேறுண்டோ என்று தேடினார், அதற்கு உவமை கூற! உவமை கிடைக்கவில்லை. எப்படிக் கிடைக்கும்? புரட்சி பல கண்ட தம் போர்க்களத் தலைவனை நேரே காண்பதைவிட மகிழ்ச்சி தரும் காட்சி தமிழருக்கு வேறென்ன இருக்க முடியும்? வேறு எம் மகிழ்ச்சி, பெரியாரின் வருகை கண்டு பூரிப்படையும் தமிழர்தம் மன மகிழ்ச்சிக்கு ஈடாகும்? வேறு எந்தக் களிப்பினை இந்தக் களிப்பிற்கு உவமை கூறமுடியும்?

கதிரவன் வருகை கண்டு களிப்புறும் மாநிலத்தின் மகிழ்ச்சியை இதற்கு உவமை கூறலாமா என்று எண்ணிப் பார்த்தார் கவிஞர். உவமை பொருந்தவில்லை. கதிரவன் வருகை காலையிலே களிப்பூட்டும் ஆனால் உச்சி வேளையிலோ மக்கட்கெல்லாம் எரிச்சல் தரும். எனவே என்ஞான்றும் இன்பந்தரும் பெரியார் வருகைக்கு அது பொருந்தாது.

சரி, மழைமுகம் கண்ட பயிர்போலக் களித்தனர் தமிழர் என்று கூற வாயெடுத்தார் கவிஞர். அடுத்த விநாடி அதுவும் பொருந்தாது என்று விட்டுவிட்டார். மழை, அளவாக இருந்தால், மகிழ்ச்சி தரும். அதுவே அதிகமானால் பயிருக்கு இன்பமல்ல, சாக்காட்டைத் தரும். வயல், குளமாகும். பயிர் தலைசாயும்.

ஓஹோ! தாய்முகம் கண்ட சேயின் களிப்புதான் நம் களிப்புக்கு ஈடாகும் என்று கருதினார் கவிஞர் ஒரு கணம். மறுகணம் தாயை வெறுக்கும் சேய்களுமுண்டு என்றெண்ணி அந்த எண்ணத்தை விலக்கினார்.

வரிசை வரிசையாக பலப்பல உவமைகளை எண்ணிப் பார்த்தார்—எதுவும் பொருந்தவில்லை—தாம் கொண்ட மகிழ்ச்சிக்கோர் உவமை கிடைக்கவில்லை!

நீங்கள்தான் சொல்லுங்கள் பார்க்கலாம், அந்த மகிழ்ச்சிக்கு உவமை இருக்க முடியுமா? முடியாதென்பதைத்தான், பாரதிதாசன் அழகானதோர் கவிதை மூலம் தெரிவிக்கிறார்.

பாரதிதாசன் பண், என்ன அழகாகவும் அற்புதமாகவும் தமிழர்தம் உள்ளக் களிப்பை, படம்பிடித்துக் காட்டுகிறது பாருங்கள்.

இதோ, அந்த இன்பக் கவிதை :—

மகிழ்ச்சிக்கோர் உண்டோ?

1

எங்கள் இயக் கங்கண்டார் தமிழ்நாட்டிற் குத்தலைவர் இந்த லோகம்
துங்கமுறும் வழிதேடித் துயரென்றும் மகிழ்ச்சியென்றும் எண்ணா மல்தம்
அங்கத்தை ஆவியினை ஆம்பொருளைத் தாம்பாரா தளிக்கும் நல்ல
கங்கைநிகர் உள்ளத்தார் இராமசாமிப் பெரியார் வரவு கண்டோம்.

2

பயிர்போன்றார் உழவருக்குப்! பால்போன்றார் குழந்தைகட்குப்! பசும்பாற்கட்டித்
தயிர்போன்றார் பசித்தவர்க்குத்! தாய்போன்றார் ஏழையர்க்குத்! தகுந்தவர்க்குச்
செயிர்தீர்ந்த தவம்போன்றார்! செந்தமிழ்நாட் டிற்பிறந்த மக்கட் கெல்லாம்
உயிர்போன்றார் இங்குவந்தார்; யாம்கொண்ட மகிழ்ச்சிக்கோர் உவமை
உண்டோ?

3

கள்ளப்போக் குடையவரின் ஆட்சியினைக் கனமக்கள் மனவெ றுப்பாம்
வெள்ளப்போக் கிற்கறைக்கும் வித்தாரப் பேச்சான முத்தா ரத்தைக்
கொள்ளப்போ முன் இங்குக் கூடியுள்ள எம்தலைவர் தோளை எங்கள்
உள்ளப்பூங் காடாக்கி உச்சியிலே கைகூப்பி உவகை கொள்வோம்.

4

சமயவெறி தணிகஎன்றார் சாதிவெறி தணிகஎன்றார் சகோத ரர்போல்
அமைகஎன அறிவித்தார் பெண்களெலாம் நல்லுரிமை அடைக என்றார்
எமைஅகத்தும் புறத்தினிலும் திருத்துதற்கே எம்பெருமான் சொன்னதெல்லாம்
இமயமலை இல்லைஎன் று சொன்னதுபோல் எண்ணினோம் பின்தெ ளிந்தோம்

5

சிந்திக்க இராமசா மிப்பெரியார்! சொன்னவண்ணம் செய்க நாங்கள்!
பந்தியிட்ட படைவீரர் தமிழ்நாட்டார்! அவர்தலைவர்! பயமே இல்லை!
இந்தியினை எதிர்க்கஎன்றார் விட்டோமா வரிச்சுமையை விட்டோமா எம்
செந்திருவை இராமசாமிப் பெரியாரை வாழ்த்தும் சிந்தை வாழ்க.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருந்தி வருகின்றதா என்று எண்ணிப்பார்த்து அதன் பின்னரே ஒப்புக் கொள்ளவேண்டும் என்னும் உணர்ச்சியை அவர் பாமர மக்களுக்கெல்லாம் ஊட்டிவிட்டார். உண்மை விடுதலைக்கு இதைவிட விரைவாக நம்மைச் செலுத்தும் பாதை வேறு இருக்கமுடியுமா?

சமுதாய சீர்திருத்தத் துறையில் அவர் ஆற்றிய பெரும்பணி சிந்தனா சக்தியை மக்கள் உள்ளத்திலெல்லாம் எழுப்பிவிட்டதே. சீர்திருத்த எண்ணங்களின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல இந்த நாட்டின் வளர்ச்சிக்கே இப்பணி மிக மிக இன்றியமையாதது என்பதை யார் மறுக்கமுடியும்?

தம்முடைய அச்சம் தயை தாட்சணியமற்ற— ஆணித்தரமான கண்டனங்களால் யார் யார் மனம் புண்படும் என்பதைப்பற்றி அவர் கவலைப்படுவதே கிடையாது. தாம் எடுத்துக்கூறும் கருத்துக்கள் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் அநுபவத்திற்கும் பொருந்துவனதாமா என்பதைத்தான் அவர் எண்ணிப் பார்ப்பார். மற்றபடி தம்முடைய தொண்டு யார் யார் உள்ளத்தில் என்னென்ன எதிரொலிகளைக் கிளப்பும் என்பதைப் பற்றி அவர் சிறிதும் எண்ணமாட்டார். சமுதாய சீர்திருத்தவாதி ஒருவருக்கு அமைந்திருக்கவேண்டிய சிறப்பான பண்பு இந்த அஞ்சாத நெஞ்சந்தான். இது என்னுடைய நண்பர் இராமசாமி நாயக்கர் அவர்களிடம் பரிபூரணமாய் அமைந்திருக்கிறது.

(நண்பர் நாயக்கர் அவர்கள்) இதுவரையில் வேறு யாரும் செய்திராத அளவு மறுமலர்ச்சி இயக்கத்தை இந்த தென்னாட்டில் பரவச் செய்துவிட்டார். இளைஞர் உலகத்தின் முழு ஆற்றலையும் பெருந்தீரத்தையும் ஒன்றாய்க் கூட்டிக் கலந்து பேரெழுச்சியை உண்டுபண்ணி விட்டார். இளைஞர் ஈட்டம் மட்டுமன்று முதியவர் கூட்டமுந்தான் அவரால் எழுச்சி பெற்றுவிட்டது. உள்ளபடியே தம்முடைய நாட்டுவளர்ச்சியில் நாட்டம் கொண்ட ஒவ்வொருவரும ஈ. வெ. ரா. அவர்களுக்குக் கடமைப்பட்டுத்தான் இருக்கிறார்கள்.

கல்கத்தாவிற்குக் கிடைத்த பேறு!

★

1944-ல் கல்கத்தாவில் ஒரு முக்கியமான அரசியல் மாநாடு! அதில் பெரியாரவர்கள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினர் கல்கத்தா தலைவர்கள். சரி என்று ஒப்புக்கொண்டு சென்றார் பெரியார். அவர் வருகையைப் பாராட்டி, 'கல்கத்தாவிலுள்ள பிரபல ஆங்கில ஏடு வாங்குவார்ட் தீட்டிய குறிப்பு இது:—

"இந்த மாநாட்டுக்கு வந்து இதைச் சிறப்பிக்கப் போகும் மிக முக்கியமான பிரபலஸ்தர்களில் ஒருவர் தென்னாட்டுப் பழம் பெரும் கிழவனார் (The Grand Old Man of the South) பெரியார் ஈ. வெ. **இராமசாமி** அவர்கள் ஆவார்கள். கீழ் சாதி மக்கள் தங்களை அடக்கி அழுத்திவரும் பார்ப்பனீய ஆட்சியை ஒழித்துக் கட்டுவதற்காகச் செய்யும் முயற்சியும், பார்ப்பனரல்லாத சமுதாயம் புரோகிதக் கொடுமையை வேரோடு களைந்தெறிவதற்காக நிகழ்த்தி வரும் புரட்சியுமே சுயமரியாதை இயக்கமாக உருக்கொண்டிருக்கிறது. இந்த சுயமரியாதை இயக்கத்தின் "சிருஷ்டிகர்த்தா"வும் அதன் தலைவரும் பெரியார் இராமசாமி தான். அவர் அதிதீவிரமான புரோகித ஒழிப்புக்கொள்கைகளையும் மத மறுப்புத் திட்டங்களையும் தென்னாட்டில் பிரசாரஞ் செய்துவருகின்றார் அவர் கல்கத்தாவிற்கு வருகிறார். **தீப்பொறி பறக்கப் பேசும் ஒரு வெண்தாடி வேந்தரைக் காணும் பேறு கல்கத்தாவிற்குக் கிடைத்திருக்கிறது.**"

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவேண்டும்? ஏதாவது ஒரு வேலையில்லாமல் உயிர்வாழ முடியாதே என்று கருதி ஏதோ ஒரு வேலை என்பதில் இதை, அதாவது ஜாதி, மதமென்ற கொடுமை ஒழிவதும், கடவுள் என்ற மூடநம்பிக்கை ஒழிவதும் மனித சமூகத்திற்கு நன்மையானது என்கின்ற கருத்தில் அதற்காக என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறேனோ அந்த வேலையைச் செய்கிறேன். இந்த உணர்ச்சி வலுத்துத்தான் அதே முக்கியமானதும், முடிவானதுமான வேலையென்று இறங்கிவிட்டேன். இந்த எண்ணத்தின் மீதே சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தேன். இந்த எண்ணம் கைகூடினால் மனித சமூகத்தில் உள்ள போராட்டங்கள் மறைந்துவிடும், தனிப்பட்ட மனிதர்களுக்குள்ள குறைகள் நீங்கிவிடும்; தனக்கு என்கின்ற பற்றும் ஒழிந்துவிடும். உற்சாகத்துக்காக வேண்டுமானால் போராட்டங்களும் குறைகளும் அதிருப்திகளும் கவலைகளும் இருக்கலாம். அதாவது பண்டிகைக்காக ஓய்வெடுத்துக்கொண்ட மக்கள் பலர் கூடி சதுரங்கமோ, சீட்டாட்டமோ விளையாடும்போது யோசனைகள், கவலைகள், அதிருப்திகள் காணப்படுவதுபோல் இயற்கையின் ஆதிக்கத்தால் நமது வாழ்வுக்கு அவசியமில்லாததும் பாதிக்காததுமான யோசனை, கவலைகள் முதலியன காணப்படலாம். இவை எந்த மனிதனுக்கும் மனிதனல்லாத மற்ற எந்த ஜீவனுக்கும் உயிருள்ள வரை இருந்துதான் தீரும்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு ஓடினேன். அந்தப் பைய னும் என்கூட ஓடிவந்தான். அதற் குள் அந்தம்மாள் அந்தப் பையனைக் கூப்பிட்டு "டே பழனியப்பா அந் தச் சொம்பைக் கழுவி உள்ளே வைத்துவிட்டுப் போடா" என்றார். அதே மாதிரியே அந்தப் பையன் லோட்டாவைக் கழுவிவைத்துவிட்டு வீதி வழியாக முன்புறம் பள்ளிக் கூடத்திற்கு வந்தான். நான்போன வழியிலேயே பின் புறமாக பள்ளிக் கூடத்திற்கு வந்தேன். பிறகு இப் படியே—இதே மாதிரியாக மற் ெறாரு சமயம் வேதகாரன் வீட்டில் தண்ணீர் சாப்பிட்டேன். இது மெல்ல மெல்ல அவர்கள் வீட்டுப் பலகாரங்களும் பிறகு அவர்கள் வீட்டில் விசேஷ காலங்களில் செய் யப்படும் காய்கறி சாமான்களும் கூடச் சாப்பிடும் படியாகச்செய்து விட்டது. எங்கள் வீட்டுக்கு இந்தச் செய்தி எட்டியது. வீடோ நல்ல பணம் வருவாய் ஏற்பட்டு பணம் பெருகி அப்பொழுது தான் பார்ப் பனர்களைப்போல் நடக்க ஆரம்பித் திருக்கிறகாலம். எந்நேரம் பார்த்தா லும் ஆச்சாரம், அனுஷ்டானம் என்கின்ற வார்த்தைகள் தான் உச் சரிக்கப்படும். என்றாலும் என் தகப்பனாருக்கு இதைப்பற்றி (நான் கண்ட இடத்தில் சாப்பிடுவதைப் பற்றி) அதிகமான கவலை கிடை யாது. "சிச்சீ இனி அப்படிச் செய்யாதே" என்று சொல்லிவிடு வதோடு அவர் வேலை ஒழிந்துவிடும். என் தாயார் ஏதோ முழுகிவிட்டது போல்கருதி மிகவும்துயரப்படுவார். என்ன பண்ணியும் காரியம் மிஞ்சி விட்டது. சாயபுமார் பையன் கொடுத்த பண்டம் கூடச் சாப் பிட்டு விட்டேன் என்டது என் வீட்டிற்கு தெரிந்து விட்டது. இதற்குள் என் பள்ளிப்படிப்பு எனது பத்தாவது வருஷத்திற்குள் ளாகவே முடிந்து விட்டது. ஏனென்றால் என் சிநேகம் தின் னாத (பொழங்கக்கூடாத) ஜாதியா ருடன்தான் அதிகம், அதனாலே நான் முரடனாகிவிட்டேன் என்பது அவர்கள் எண்ணம். காலில் விலங்கு இடப்பட்டேன். அந்த விலங்குகளுடனேயே அந்தப்பிள் ளைகளுடன் கூடித்திரிவேன். ஒரு பதினைந்து நாள் இரண்டு கால்களி லும் விலங்குக் கட்டை போடப்பட் டேன். அப்பொழுதும் இருதோளி லும் இரண்டு விலங்குகளைச் சுமந் துக்கொண்டு திரிந்தேன். அப்போ தும் அந்தப் பிள்ளைகளுடன் விளை யாடப் போய்விடுவேன்.

கடைசியாக நான் அப்பள்ளிக் குப்போவது நிறுத்தப்பட்டு சர்க் கார் பள்ளிக்கூடத்துக்கு அனுப் பப்பட்டேன். அதாவது முனிசி பல் பிரைமரிபள்ளிக்கூடத்துக்கு. அதுவும் 2 வருஷத்திலேயே (எனது 10-12-வது வயதிலேயே) நிறுத்தப்பட்டு எங்கள் கடையி லேயே வியாபாரத்தில் போடப் பட்டு விட்டேன். அதில் எனக் குள்ள வேலை, மூட்டைகளுக்கு விலாசம் போடுவது, சரக்குகள் ஏலங்கூறுவது, ஒழிந்த நேரங்க ளில் என் சொந்த வேலையாம் புரா ணங்களைப்பற்றி விவகாரம் செய் வது. இந்த வேலை எப்படி ஏற் பட்டதென்றால் எங்கள் வீட்டில் சந்நியாசிகளுக்கும் பாகவதர்களுக் கும் சமயப் பிச்சைக்காரர்களுக் கும் (பார்ப்பனர்களுக்கும்) வித்து வான்களுக்கும் ரொம்பவும் செல் வாக்கு இருந்தாலும், அவர்களைக் கண்டு எனக்குப் பிடிக்காததாலும், அவர்கள் சொல்வதைப் பரிகாசம் செய்ய ஆரம்பித்து, மறுத்துச் சொல்ல ஆரம்பித்து,' விதண்டாவா தக்' கேள்விகள் கேட்க ஆரம்பித்து', மெல்ல மெல்ல அதுவே ஒழிந்த நேரவேலையாகவும், அதுவே இளைப் பாறுவதற்கு ஒரு துணைக் கருவியா கவும், எனக்கு உண்மையிலேயே உற்சாகமுள்ள வேலையாகவும் நேர்ந்துவிட்டது. நான் புராணங் களையோ வேறு எந்தத்தனிப்பட் புஸ்தகங்களையோ படித்ததில் லென்றாலும் சைவம், வைணவ ஆகிய இருசமய சம்பந்தமா உள்ள கதைகளோ, சரித்திர களோ சதாசர்வ காலம் எங்க வீட்டில் இரு சமய "பக்தர்"க ளும் பண்டிதர்களாலும், காலட் பம் செய்யப்பட்டு வந்தது. ஏன் பணம் வந்து குவியும்போது தர்ம செய்து தர்மப் பிரபு பட்டம் வா வேண்டாமா? ஆதலால் இவர்க எங்கள் வீட்டில் குவிந்து கிடப்ப கள். என்தாயார் இவர்கள் அனை களை அதிக "பக்தி சிரத்தை"யுட ன் கட்டுக்கொண்டேயிருப்பா தகப்பனாருக்கு இது ஒரு பெரு யாகவும் திருப்தியாகவும் இருக்கு இதனால் எனக்கு சமய சம் மான—புராண சம்பந்தமான வி யங்கள் தானாகவே தெரியவரு அவற்றிலிருந்தே நான் பல கேள் கள் கேட்கவும் அவர்கள் (பக் க்கள், பண்டிதர்கள்) பல கேள் களுக்கு பதில் தாருமாறாக ஆளுக்கு ஒரு விதமாகவும் செ ல்வுமாய் 'இருந்ததே என அதிக உற்சாகத்தை விளைவி தோடு என்னை ஒரு 'கெட் காரப் பேச்சுக்காரன்' என் அக்கம் பக்கத்திலுள்ளவர் சொல்வுமான நிலைமை ஏற் டது. என் தகப்பனாருக்கு நா இப்படி "விதண்டாவாதமா கேள்வி கேட்பதில் கோபம் வந்

(12-ம் பக்கம் பார்க்க)

பேசும் பிணம்

இராதாமணாளனின் சரிதச் சித்திரம்

பேசும் பிணம், போர்வாள், கொரில்லாப் பெண் ஆகிய மூன்று சிறந்த கதைகள் கொண்டது.

விலை அணா 8 தபாலில் 0 9 0

திராவிடன் பதிப்பகம்

வேலூர் N. A.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தைபடி! எதிரிகள் என்றால் சாமான்யமானவரா? ல்லை! எதிரிகளின் பட்டியலை ஒரு முறை பார்த் ாலே போதும் அவரை எதிர்த்து நின்றவர்களின் பலம்' எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை றிய.

இந்த மகத்தான எதிர்ப்பு வேறு ஒரு தலைவருக்கு ருந்திருக்குமானால் அவர் துவக்க கட்டத்திலேயே ருண்டுபோய் இருப்பார், பொது வாழ்விலிருந்து லகி அஞ்ஞாத வாசமும் துவக்கி யிருப்பார், ஆனால் பரியாருக்கோ இந்த எதிர்ப்பு மேலும் மேலும் பல ட்டும் அற்புதமான பெனிசிலின் இஞ்சக்ஷனாக ருந்தது.

எதிர்ப்பு வலுக்க வலுக்க பெரியாரின் இயக்கம் லுத்தது.

பெரியார் மேலும் மேலும் அஞ்சாது பணியாற்றி ர்.

அவருடைய பெருந் தொண்டு எக்காரணம் கொண் ம் இடையே நிற்கவில்லை.

ஆபத்துகள் ஓராயிரம் அடுக்கிவந்த போதும் அவர் ம் பணியினைக் கைவிட்டாரில்லை.

பணி தொடர்ந்து நடந்தது.

ஆண்டுகள் சில சென்றன.

எதிர்ப்பு குறையலாயிற்று—ஆதரவு அரும்புவிட் து—முதலில் ஆதரவு மிக மிகக் குறைவுதான்— னால் நிலைமை அப்படியே இருக்கவில்லை.

மெள்ள மெள்ள அவருக்கு ஆதரவு பெருகிற்று.

கொஞ்சம் கொஞ்சமாக படை வரிசை பலப் ட்டது.

நாள் செல்லச் செல்ல போர்வீரர்கள் ஆயிரம் ஆயிர ாக ஈரோட்டுப் பாதையில் கம்பீர நடை போட்டு டக்கத் தொடங்கினர்.

பகுத்தறிவுப் பாசறைகள் ஊருக்கு ஊர் நிர்மாணிக் ப் படலாயின.

பொழுது புலர்ந்தது புள் இனம் ஆர்த்தன. ன்மை இருட் கணம் போய் மறைந்தொழிந்தன. ாலை மலர்ந்தது. கதிரவன் எழுந்தான். எங்கணும் த்தொளி பாய்ந்து வந்தது.

காலை மலர்ந்தது கண்ட மாந்தரெலாம் தங்கள் கண் லர்ந்தே நடமாடத் தொடங்கினர்.

பகுத்தறிவுச் சுடரோனின் பொன்னொளியில் மூழ் னர் மக்கள். புதுவாழ்வு பெற்றனர். புரட்சிக் தம் பாடினர். "புதியதோர் உலகு செய்வோம்— கெட்ட—போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப் போம்" என்று புதிய பண் இசைத்தனர். எல்லார்க் ும் எல்லாமும் இருப்பதான இடம் நோக்கி—இன்பத் திராவிடப் பொன்னாடு நோக்கி மடமடவென நடக்க லாயினர்.

களிப்பு அவர்கள் முகத்தில்! இன்பத்தின் திருக் கூத்து அவர்கள் கண்களில்! புரட்சித் தத்துவங்க ளின் அலைமோதுதல் அவர்கள் உள்ளத்தில்!

ஒவ்வொருவரும் ஒரு புத்துலகச் சிற்பியாக, ஒரு புரட்சிவீரனாக, ஒரு சுயமரியாதை இளஞ்சிங்கமாகக் காட்சி தரலாயினர்.

அந்த மாவீரர்கூட்டம், புத்துலகப் பாதையில், புரட் சிப் பண் பாடியவண்ணம், புன்னகை முகத்தில் ததும்ப, புத்தொளி கண்களில் தவழ, சீர்திருத்த ஆர் வம் தம் நடையில் பேச்சில் கருத்தில் அத்தனையிலும் பொங்கித் ததும்பத் ததும்ப, ஈரோட்டுப் பாதையில் மேலும் மேலும் முன்னேறுகின்றனர்.

அதோ அப்பக்கம் பாருங்கள் அந்த வெற்றி வீரர் கூட்டம் எவ்வளவு பெருமிதத்தோடு, தைரியத்தோடு, வெற்றி நிச்சயம் என்ற திடசித்தத்தோடு நடந்து செல்கிறது!

மீண்டும் பாருங்கள். விநாடிக்கு விநாடி அந்த சுயமரியாதைச் சூறாவளிப் படையினரின் தொகை பெருகிக்கொண்டே இருப்பதைப் பாருங்கள். அடிக் கொரு தடவை நாலா புறத்திலிருந்தும் புதுப் புது பட்டாளங்கள் அந்த அணிவகுப்புடன் வந்து கலந்து கொண்டு புரட்சி முழக்கம் புரிகின்ற அற்புதக் காட்சி யைப் பாருங்கள்.

மறுபடியும் பாருங்கள். மேற்றிசைப் பகுதியி லிருந்தும் கீழ்த்திசைப் பகுதியிலிருந்தும் தென்திசைப் புறத்திலிருந்தும் வடதிசைப் புறத்திலிருந்தும் மாண வர் கூட்டம் திரள் திரளாக வந்து அந்த வீரர் கூட் டத்தோடு சங்கமம் ஆகின்ற வியத்தகு காட்சியைக் காணுங்கள்.

திரும்பவும் பாருங்கள். மான் விழி படைத்த இளந் தோகையர் கூட்டம் 'எமக்கே முன்னிடம்' என்று உரிமை பாராட்டிக்கொண்டு படை வரிசையின் முன் வரிசைக்கு முந்திடும் நிகழ்ச்சியினைப் பாருங்கள்.

மறுபடியும் பாருங்கள். அந்த வீரர் கூட்டம் இன்பத் திராவிடமே எமது இலட்சியம் என்றும் சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு என்றும் ஓங்கி முழங்கும் உணர்ச்சிச் சிறப்பைப் பாருங்கள். அந்தச் சிறப்பு பெரியாரின் பெருந் தொண்டின் விளைவாக எழுந்த புரட்சிக் களிப்பு என்பதையும் நினைத்துப் பாருங்கள்.

இந்த அழகிய காட்சிகளைக் கண்டுவிட்டு, உங்கள் மனக் கண்ணில் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால், புரட்சித் திட்டங்களை நாட்டிலே தூவிய மக்கள் ஆத்திர மேலீட்டால் கல் வீசிக் கொண்டிருந்த கருத்தற்ற காட்சியையும் ஒரு கணம் கொண்டு வந்து நிறுத்தி, அந்தக் காட்சியினையும் இந்தக் காட்சியினையும் ஒப்பிட் டுப் பாருங்கள்—பெரியார் பெற்ற பெரு வெற்றி தெற்றெனப் புலப்படும் உங்களுக்கு!

பழமையிலே பிறந்து, பழமையிலே வளர்ந்து, பழ மையையே பேசி, பழமையையே எழுதி, பழமைக் காகவே வாழ்ந்து பழமைக்காகவே வளர்ந்து, பழமை யாகவே உருமாறிக் கிடந்த—பழங்காலத்தவராகவே மாறிவிட்ட தமிழ்ப் பெருங்குடி மக்களை புத்துலகச் சிற்பிகளாக மாற்றி, எத்தகைய அக்னிப் பரீட்சைக் கும் தயார் கூறத்தக்க புரட்சிப் பட்டாளம் ஒன்றை எழுப்பியிருக்கிறாரே பெரியார், இதைவிட மகத்தான சமுதாயப் புரட்சியை வேறு யார் எங்கே செய்து காட்டி இருக்கிறார்கள்?

* * * *

தலைவிதி சாஸ்திரம் சம்பிரதாயம் என்று பேசி வந்த தமிழர், இதுபோது புரட்சி பகுத்தறிவு புது உலகு என்று பேசத் தொடங்கிவிட்டார்கள்.

இராமாயணம் பாரதம் பெரியபுராணம் ஆகியவற்றைத் தீட்டிய கைகள் சாக்ரடீசை, பெர்னட்ஷாவை, வால்ட் விட்மனை, இங்கர்சாலைப் படம் பிடிக்கத் தொடங்கிவிட்டன.

களிமண்ணும் கையுமாக இருந்து விநாயக சதுர்த்தி கொண்டாடியவர்கள் காரல் மார்க்சும் கையுமாக இருந்து மேதினை மாட்சியை நாட்டுக்கு எடுத்து நவிலத் தொடங்கிவிட்டார்கள்.

நரகாசுரவதமும் நவராத்திரிப் பண்டிகையும் விஜய தசமித் திருநாளும் வைகுண்ட ஏகாதசியும் புனர்பூச உற்சவமும் பதினெட்டாம் பெருக்குப் பெரு விழாவும் கொண்டாடிக் கொண்டாடிச் சலித்தவர்கள் பாஸ்டில் சிறையைப் பொடிப் பொடியாக்கிய ஜூலை 14, ஜார் கொடுமையைச் சாய்த்த அக்டோபர் புரட்சி, உழைப்பின் பெருமையை விளக்கும் ஆறுவடைத் திருநாள் இன்னபிறவற்றையே பாராட்டத் தொடங்கிவிட்டார்கள்.

மூட நம்பிக்கை மறைந்தது

அறிவுத் தெளிவு பிறந்தது.

பழமைப் பித்து தொலைந்தது.

புரட்சியில் ஆர்வம் பிறந்தது.

புனர் ஜன்மக் கற்பனை ஒழிந்தது

புத்துலக வேட்கை எழுந்தது.

சிலை வணக்கமும் ''தேவலோக மகிமை''யும் விடை பெற்றுக்கொண்டன.

ஆராய்ச்சி உள்ளமும் பகுத்தறிவுத் தராசும் சிறப்பிடம் பெற்றுள்ளன.

''பூதேவர்'' உயர்ந்தவர், ''சூத்திரர்'' தாழ்ந்தவர் என்ற சூது மனப்பான்மை மண்டையிலடிபட்டு மாய்ந்தொழிந்தது.

எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந் நாட்டு மன்னர் என்னும் ஒருமைப் பாட்டுணர்ச்சி எங்கும் நிறைந்தது.

பெண்ணென்பாள் ஓர் பேதை என்னும் ஆரிய தத்துவம் அழிந்து, மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்ற கிண்கிணி இதம்யாண்டும் பரவலாயிற்று.

அவள் இளம் வயதில் விதவையானாள்—அது அவள் விதி என்று கூறும் சதி தொலைந்து மாதருக்கும் மறுமணம் என்ற நற் கொள்கை நடமாடலாயிற்று.

'தமிழருக்குத் திருமணமா—ஆரியப் புரோகிதன் வந்தால்தான் அது நடக்கும்' என்ற அடிமை எண்ணம் மடிந்து, தமிழர்க்குரிய இத்தகு நிகழ்ச்சிகளை தமிழரே நடத்திக் கொள்ளும் இன்பநிலை பிறந்தது.

கன்னிகா தானம் மறைந்து, வாழ்க்கை ஒப்பந்தம் தோன்றலாயிற்று.

பெண்களுக்குச் சொத்தில்லை என்பதுபோய் சொத்துரிமை மசோதாவே வந்து சட்டமாகும் அளவுக்கு சமுதாயத்தில் சீர்திருத்த ஆர்வம் பிறந்திருக்கிறது.

வாழ்க்கையின் பல துறைகளிலும் மட்டுமல்ல எழுத்து, பேச்சு, இசை, நாடகம், சினிமா முதலிய கலைத்துறைகள் பலவற்றிலும் புரட்சிக் கருத்துகள் புது வாழ்வு புரிய தொடங்கிவிட்டன....

ஆம்! இன்று தமிழகம் எங்கணும் மகத்தானதோர் மறுமலர்ச்சி வேகம் காணப்படுகிறது. இந்த மறுமலர்ச்சி வேகத்திற்கு ஆட்படாத கட்சிகளோ, இதன் தத்துவத்திற்கு உட்படாத தமிழர் கூட்டமோ இன்றில்லை, இல்லை!

யார் இந்த மறுமலர்ச்சிக்குக் காரணம்? யார் இந்தப் புது வாழ்வு தமிழருக்கு ஏற்படுவதற்கு மூல காரணமாய் இருந்தவர்—இன்றும் இருப்பவர்? எவர் தொண்டின் விளைவு இது?

அவர் பெயரை நாம் கூறத் தேவையில்லை. நாடு அறியும் அதனை—நம்மைவிட மிக நன்றாக அறியும்.

செப்டம்பர் 17-ல் அவருக்கு ஆண்டு 69 முடிந்து 70 தொடங்கி இருக்கிறது.

அவருடைய 70-ம் ஆண்டு பிறந்த நாள் இந்த ஒரு மாத காலமாக தமிழர் வாழும் தரணி எங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. இன்னமும் பல இடங்களில் நடந்தபடி உள்ளது. இந்த மாதம் முடிய பல ஊர்களில் இனியும் பெரியார் விழா கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெரியார் புதிய தமிழகத்தின் தலைவர், தலைவர் மட்டுமல்ல அதன் நிர்மாணகர்த்தாவும் அவர்தான். பெரியார் தமிழருக்குத் தந்த அன்பளிப்பு புதிய தமிழகம். ஆகவேதான் புதிய தமிழகத்தில் உலவும் புரட்சித் தமிழர், பெரியார் விழா என்றதும் இவ்வளவு களிப்பும் எக்காளமும் அடைகின்றனர்,

இந்த ஒரு மாத காலமாக, தமிழர், ஆங்காங்கே கூடி நின்று தங்கள் தலைவர் பெருந்தகைக்கு தங்கள் பணிவையும் அன்பையும் வாழ்த்தையும் தெரிவித்திருப்பதோடு, பெரியார் அவர்கள் இடும் கட்டளை ஒவ்வொன்றையும் உடனடியாக நிறைவேற்றி வைப்பதாகச் சூளுரை புகன்றிருக்கின்றனர்.

"பெரியார் அவர்களே! எங்கள் மாபெருந் தலைவரே! எங்கட்கெல்லாம் உணர்ச்சியூட்டிய உத்தமரே! தங்கள் சொல் வழி நின்று, தங்கள் கட்டளைப்படி நடந்து, என்ன விலை கொடுத்தேனும் இன்பத் திராவிடத்தை அடைந்தே தீருவோம்" என்று அந்த ஆயிரமாயிரம் தமிழர்களுடன் சேர்ந்து நாமும் இந்த நன்னாளில் பெரியார் அவர்கட்கு நம் பணிவான உறுதிமொழியைத் தெரிவிக்கப் பெரிதும் விழைகிறோம்.

வாழ்க பெரியார்! வாழ்க திராவிடம்!

திராவிடத் தோழர்களே!

போர்வாளுக்குச் சந்தாதார் ஆகுங்கள்!

ஆண்டுத் தொகை ரூ. 5. அரை ஆண்டு ரூ. 2½.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் உள்ளுக்குள் தனது மகன் இப்படி புத்தியாய் பேசுகிறானே என்கிற மகிழ்ச்சி உண்டு.

இந்தச் சம்பவங்கள் தான் எனக்கு மேலும் மேலும் ஜாதி மதத்திலும், கடவுள் சாஸ்திரங்களா, ஆகியவைகளிடத்திலும் நம்பிக்கையில்லாமல் போகும்படி செய்திருக்கலாமென்று நினைக்கிறேன்.

ஆனால் சுற்றுச்சார்புதான் (Association and Surrounding) ஒரு மனிதனின் வாழ்க்கை லட்சியம், கொள்கை ஆகியவர்களுக்குக் காரணமானது என்று சொல்லப்படுகிறது. அனுபவத்தில் பெரிதும் இப்படித்தான் இருந்தும் வருகிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரை ஒரு துறையிலாவது சுற்றுச் சார்பு என்னை அடிமைப்படுத்தியதாகச் சொல்லுவதற்கு இடமே கிடைக்கவில்லை. நான் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு தன்மையிலும் என்னைச் சுற்றி இருந்த சுற்றுச்சார்பு, சகவாசம் ஆகியவைகளுக்கு மாறாகவே இருந்து வந்திருக்கிறேன்.

உதாரணமாக எனது நல்ல வாலிப பருவத்தில் 20 முதல் 32 வயது வரையில் சகபாடிகள் ஏறக்குறைய அந்தரங்க சகபாடிகள் எல்லோரும் மதுவருந்துபவர்களாவார்கள். அது மாத்திரமா? என்னிடத்தில் அதிக காதல் உள்ள சர்க்கார் அதிகாரிகள் ஜமீன், மிராசுதார்கள் ஆகியவர்களும் மது வருந்துபவர்கள். மேல்கண்ட வயதில் அநேகமாக இரவெல்லாம் இந்த கூட்டத்தாருடனே கோலாகலமாய் இருந்து, காலை 6 மணிக்கு வீட்டுக்குவந்து கொத்துச்சாவியை எடுத்துக்கொண்டு கடை திறக்கப் போய்விடுவேன். ஒரு ராத்திரிக்கு 4 பாட்டல் 5 பாட்டல் (பிராந்தி) உடைபடும். எனக்கும் மாதத்தில் இந்தச் செலவு சுமார் 40, 50 ரூபாய் ஆகும். நானே என் கையால் டம்ளரில் ஊற்றி சோடா கலந்து கொடுப்பேன். சிலர் குடித்துவிட்டு போதையில் என் மீது துப்புவார்கள். ஒரு காலத்தில் ஒரு டிப்டி கலெக்டரும் சால்ட் அசிஸ்டெண்ட் கமிஷனரும் நான் ஊற்றிக்கொடுத்ததையே சாப்பிட்டுவிட்டு என்னைப் பிடித்துக் கீழே தள்ளி என் வாயில் பலவந்தவாக ஊற்றினார்கள். அப்படியெல்லாம் இருந்தும் என்னை அந்த சவகாசமும் சுற்றுச்சார்பும் அது (மது அருந்தினால்) எப்படி இருக்கும் என்று யோசிக்கக்கூடத் தூண்டவில்லை. என் மனைவியாருக்கு என் மீது அடிக்கடி சந்தேகம் தோன்றும். இம்மாதிரி கூட்டத்தில் இருந்து வீட்டுக்குப்போன உடன் என் வாயை ஊதிக்காட்டச் சொல்லுவார்கள். நான் கிராக்கி செய்வேன். கட்டாயத்தில் வாயை மோந்து பார்த்து திருப்தி அடைவார்கள்.

இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் சுற்றுச் சார்பு எதுவும் என்னை வசப்படுத்திக் கொள்ளவில்லை என்பதற்கு ஆகவே யாகும். இனியும் அம்மாதிரியான சம்பவங்களே அதிகப்படியாய்க் காணப்படுகின்றன.

இது இப்படியிருக்க, நான் இந்தக் கூட்டத்தில் இப்படிப்பட்ட கேளிக்கையில் இருந்துகொண்டே எனது வர்த்தகத் தொழிலில் நான் ஒரு அளவுக்கு வெற்றி பெற்றேன். எனது தகப்பனார் நம்பிக்கைக்குப் பாத்திரனானேன். என் தகப்பனார் இருக்கும்போதே எங்கள் வியாபாரத்திற்கு தன் பெயரை எடுத்துவிட்டு என் பெயர் கொடுக்கப்பட்டுவிட்டது. ஊர்ப்பெருமை விஷயங்களிலும் என் தகப்பனார் ஒவ்வொன்றிலும் இருந்து விலகிக்கொண்டு என்னையே தள்ளி விட்டார். எங்கள் ஊர்ப்பொதுக் கோவில்கள், சர்க்கார் தேவஸ்தான சம்பந்தமான காரியங்கள் பெரிதும் எங்கள் வீட்டுச் சொந்தக் காரியம் போலவே நடைபெறும் ஆதலால் அவற்றிற்கு என்னையே முதன்மையாக்கி விட்டார்கள். ஒரு சமயம் இதனால் எனக்கு கடவுள் பக்தி ஏற்படலாம் என்கின்ற எண்ணமோ என்னவோ தேவஸ்தானக் கமிட்டி காரியதரிசியாகவும் தலைவனாகவும் ஆக்கப்பட்டு விட்டேன்.

இப்படி யெல்லாம் இருந்தும் ஏற்றுக்கொண்ட காரியத்தைச் சரியாய்-உண்மையாய்ச் செய்வதென்பதல்லாமல் அநேக காரியங்களில் எனக்குப் பிடிவாதமான நம்பிக்கை யென்பதே ஏற்பட்டது கிடையாது. எப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத காரியத்தை ஏற்றுக்கொண்டாலும் நாணயமாகவும் அதிக கவலையாகவுமே செய்து வருவேன்.

நிற்க, ஜாதி மதக்கொடுமை ஒழிக்கப்பட வேண்டுமென்பதிலும் கடவுள் என்ற மூட நம்பிக்கை ஒழிக்கப்பட வேண்டுமென்பதிலும் மாத்திரம் எனக்கு உண்மையான நம்பிக்கையும் உணர்ச்சியுள்ள சிரத்தையும் உண்டு. அதுவும் நான்தான் செய்ய வேண்டுமென்றோ, அதற்காகத்தான் இருக்கிறேன் என்றோ கருதுவது இல்லை.

என்ன காரணத்தாலோ நாம் சவுக்கியமாக உயிர் வாழ்கின்றோம். எப்படியோ உயிர் வாழ்வுக்கு மற்ற எவருடைய தயவையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லாத நிலைமையில் இருந்து வருகின்றோம். மனிதனுக்கு இந்த இரண்டு காரியந்தான் மேலான சம்பத்து ஆகும். அதாவது உழைக்க உறுதியும் ஆசையும்—அதாவது சோம்பேறித்தனமும் களைப்பிணித்தனமும் இல்லாத, திடம் உள்ள சரீரமும் தனது வாழ்வில் எந்தத்துறைக்கும் மற்றவர்களை எதிர்பார்க்கவோ, தனக்குச் சரியென்று தோன்றிய அபிப்பிராயங்களை — முடிவுகளை தனது வாழ்க்கைக்காக—வாழ்க்கை நலத்துக்காக—மற்றவர்களின் தயவுக்காக மாற்றிக்கொள்ளவோ வேண்டிய அவசியமில்லாத-சாகும் வரை சுதந்திர உணர்ச்சியுடன் இருக்கத் தகுந்த நிலை எதுவோ அதுவே மேல்கண்ட உயர்ந்த சம்பத்தாகும். அப்படிப்பட்ட நிலையில் நான் இருப்பதால் (இருக்கிறதாக நான் நினைத்துக்கொண்டிருப்பதால் அந்த) நிலையைப் பாழாக்குவதற்கு இஷ்டமில்லாமல் பயனுள்ள வேலையென்று எதைக் கருதுகின்றேனோ அதைச் செய்கிறேன் என்பதல்லாமல் வேறு எவ்விதப் பிடிவாதமும் எனக்குக் கிடையாது.

நாளை நான் சாகும்போது எனக்கு உணர்வு இருந்தால் நிம்மதியாகத்தான் சாவேனே ஒழிய ஒரு குறையும் இருப்பதாக நான் கருதமாட்டேன். எதையும் நான் குறையாய் விட்டுவிட்டுப் போகிறேன் என்று அதிருப்திப்படவுமாட்டேன். நான் ஜீவனோடிருப்பதால் அதற்கு ஒரு வேலை இருந்துதானே

(8-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)